(2) அறிவிப்புகள்.

(அ) பக்ரீத் பண்டிகைக்கு விடுமுறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு 27—2—1969 வியாழக்கிழமை, பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு விடுமுறை என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளதால் சட்டப் பேரவையில் 27—2—1969 வியாழக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப் படவேண்டிய அலுவல்கள் 28—2—1969 வெள்ளிக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படும்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் சட்டம், அமைதி காக்க தவறியது குறித்து அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ஜெயராஜ் அவர்கள் ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், அதாவது—

This House censures and disapproves the policy of the Ministry in particular respect, namely, its failure to maintain Law and Order in Thanjavur District resulting in the ghastly incident of arson on 25th December 1968 in the village of Kilvenmani and the death of 42 innocent women, children and old men.

நான் ஏற்கனவே, இப்பொழுது முதலமைச்சர் கருணாநிதி அவர்களின் தலைமையில் அமைந்திருக்கின்ற அமைச்சரவை, காலஞ் சென்ற மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்திருந்த அமைச்சரவையின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுகிறது என்றும், ஆனால் இந்த நிகழ்ச்சி முந்திய அமைச்சரவை பதவியிலிருந்தபொழுது நிகழ்ந்ததாகக் கூறப்படும் செயலைக் குறிப்பிடுவதாக இருப்பதால், அதற்கு இந்த அமைச்சரவை பொறுப்பு ஏற்பது முறையாகாது என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிறேன். இருந்தாலும் அலுவல் ஆய்வுக்குழுவில் மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மற்ற கட்சித் தலைவர்களும், இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒத்த கருத்தைக் கூறியிருப்பதால், இதற்கு என் இசைவை வழங்க விரும்புகிறேன். இதற்கு இந்த அவையிலே அனுமதி கொடுப்பதற்கு ஆதரவாய் உள்ள உறுப்பினர்கள் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்)

இத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுப்பதற்கு வேண்டிய அளவிற்கு ஆதரவு இருக்கும் காரணத்தால் இதற்கான அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என அறிவிக்கின்றேன்.

இத்தீர்மானம் இம்மாதம் 28-ஆம் தேதி காலை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.